ஒரு பேப்பர்
ORU PAPER

எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:
லண்டன்
சேயோன் - அ.இரவி
மணி - அகிலன்
கனடா
தயா - பொன்.விவேகானந்தன்
பாரிஸ்
சிறி
ஜேர்மனி
சபேசன் - சாந்தி
சுவிஸ்
ரேமன் - சந்துரு
பொறுப்பாசிரியர்
- கோபி -
மக்கள் தொடர்பு
பாலா
விளம்பரம்
கௌரி - சிந்து
அச்சு
குமார் (ஜெர்மனி)
வடிவமைப்பு
jasmine studio
முகப்பு வடிவமைப்பு
seven zero graphics
விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - கிரி
தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்
நிதி – நிர்வாகம்
முருகானந்தன்
வழங்கல்
உதயகுமார்-ராஜு-கரன்

உங்கள் தொடர்புகட்கு:

தொலைபேசி (Tel)
லண்டன் 020 7043 4310
பாரீஸ் 01 7289 8165
சுவிஸ் 043 500 0277
தொலைநகல் (Fax)
020 7043 4312

ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

பணிமனை முகவரி
Oru Paper
45'B' Crusoe Road
Mitcham CR4 3L J
Surrey

மின்னஞ்சல்:
info@orupaper.com
இணையம்:
www.orupaper.com

*'Oru Paper' is a bi-lingual paper published from London by Jasmine Studio Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*

# கருத்துச் சுதந்திரம் என்பது எதுவரை?

**தேவபுத்திரன்**
*(ஒரு பேப்பருக்காக )*

படைப்பாளிகளின் கருத்துச் சுதந்திரத்தில் யாரும் தலையீடு செய்யக் கூடாது என ஒரு வாதம் முன்வைக்கப்படுகிறது. படைப்பாளிகள் மற்றவர்களது மனஉணர்வுகளை பாதிக்கும்படி படைப்புக்களை ஆக்கினால் அவற்றினை வெளியிட அனுமதிக்கக் கூடாது என்று இன்னொரு வாதமும் முன்வைக்கப்படுகிறது. இவை இரண்டுமே ஒன்றுக்கொன்று முரண்பாடானதாக அமைந்து விடுகிற போது, விமர்சகர்கள் அந்தச் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு தமக்கு தோதான ஒன்றை தேர்ந்தெடுக்கிறார்கள்.

திரைப்படம், சிறுகதை, நாவல், கவிதை, கட்டுரை, கருத்துப்படம் என படைப்பாளிகளின் படைப்புக்கள் பலவும் இப்படியான விமர்சனங்களுக்கும் தீவிரமான எதிர்ப்பிற்கும் உள்ளாகின்றன. பொதுவாக படைப்புகள், அரசியல் அல்லது மதம் சார்ந்ததாக ஏன் குறித்த சமூகங்களைக் குறித்ததாக வெளிவரும்போது எதிர்ப்புக்கள் எழுகின்றது. அவை வெறும் விமர்சனங்களைக் கடந்து வன்முறையாக வெடித்து உயிர்களையும் உடமைகளையும் காவு கொள்ளும் அளவிற்கு சென்று விடுகின்றன.

இதில் அண்மையில் நடந்த சம்பவம் ஒன்றைப் பார்ப்போம். துசார பீரிஸ் என்ற சிங்களவர், 'பிரபாகரன்' என்ற பெயரில் ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை தொடர்புபடுத்தி சிங்களத் திரைப்படம் ஒன்றை தயாரித்துள்ளார். அந்த படத்திற்கு மேலதிக பிரதிகளை தயாரிப்பதற்காகவும் அதனை தமிழில் மொழி மாற்றம் செய்வதற்காகவும், அவர் சென்னையில் தங்கியிருந்த போது, விடயமறிந்த தமிழ் உணர்வாளர்களின் எதிர்ப்பிற்கு முகம் கொடுக்க வேண்டியதாயிற்று. அவர் தாக்கப்பட்டார். 'இரண்டு தட்டு தட்டியிருக்கிறாங்க' என குமுதம் சஞ்சிகையில் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த தட்டின் உக்கிரம் அவ்வளவாக இருக்கவில்லை என அவர் தாக்கப்பட்ட பின்னர் எடுக்கப்பட்ட படங்களிலிருந்து தெரிகிறது.

இந்தச் சம்பவத்தையொட்டிய பல்வேறு விமர்சனங்களை இணையதளங்களில் பலர் எழுதியிருக்கிறார்கள். இன்னும் எழுதுவார்கள். இந்த விமர்சனங்கள் அவரவர் அரசியல் நிலைப்பாட்டினைப் பொறுத்து வேறுபட்டிருந்ததில் ஆச்சரியமொன்றுமில்லை. 'இந்த அடிக்குப் பிறகு இவங்கள் தமிழ்நாட்டு பக்கம் தலை வைச்சு படுக்க மாட்டாங்கள்' என்று சிலர் மகிழ்ச்சி ஆரவாரம் செய்ய, இன்னும் சிலர் இது கருத்துச் சுதந்திரத்திற்கு விழுந்த அடியென ஓலமிடுகின்றனர். இரண்டாவது வகையிலான இருவரின் கட்டுரைகளை படிக்க நேர்ந்ததால் இதை எழுதுகிறேன். ஒருவர் கனடாவிலிருக்கும் ரதன் என்பவர் மற்றவர் லண்டனிலிருக்கும் ஜமுனா இராஜேந்திரன்.

துசாரா பீரிசின் திரைப்படம் இன உணர்வுகளைத் தூண்டி இலாபம் சம்பாதிக்கும் நோக்கத்துடன் எடுக்கப்பட்ட படமென அப்பட்டமாகத் தெரிகிறது. சிறிலங்கா அரசின் பலத்த ஆதரவுடன் படமாக்கப்பட்டிருக்கிறது. இப்படத்தை பார்க்க மகிந்த இராஜபக்ச ஆவலோடு இருக்கிறாராம் என்பது ஒரு கொசுறுச் செய்தி.

பிரச்சாரவகையில் அமைந்துள்ள இந்த திரைப்படத்தில் தமிழர்களை மனம் நோகச் செய்யும் வகையில் புனைந்த சம்பவங்கள் படமாக்கப்பட்டுள்ளதாக படத்தினைப் பார்த்த தமிழ்நாட்டு கலைஞர்கள் சிலர் தெரிவித்திருக்கிறார்கள். அந்த வகையில் துசாராவின் படைப்பிற்கு எதிராக அவர்கள் கிளர்ந்தெழுந்தது இயற்கையே. ஆனால் அவர்களது உணர்வுகளை போலியானது என நிராகரிக்கிறார் ரதன். மக்களின் உணர்வுகளுக்கு எந்த முக்கியத்துவமும் கொடுக்க வேண்டாம். அவர்கள் கிடக்கிறார்கள். படைப்பாளியின் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்று வரிந்து கட்டிக் கொண்டிருக்கிறார்கள் இந்த இருவரும்.

மேற்படி இருவரிடமிருந்தும் இப்படியான கட்டுரைகள் வந்திருப்பதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது? மெல்லிற வாய்க்கு அவல் விழுந்த மாதிரி தமிழ் தேசியவாதிகளை திட்டித் தீர்க்க இன்னொரு சந்தர்ப்பம் அவர்களுக்கு கிடைத்திருக்கிறது. விட்டு வைப்பார்களா? 'இலக்கிய சந்திப்புகளில்' குஸ்புவுக்கு ஆதரவாக தீர்மானம் போட்டு விட்டு, நாக்கை தொங்கப் போட்டுக் காத்திருந்தவர்களுக்கு தீனி கிடைத்திருக்கிறது. கருத்துச் சுதந்திரக் கொடியை தூக்கிப் பிடித்திருக்கிறார்கள்.

இதில் ரதன் கொஞ்சம் அதிகமாகப் போய் துசாரவுக்கு ரசிகர்மன்றம் வைக்காத குறையாக அவரைப் பற்றி புழுகித் தள்ளியிருக்கிறார். துசாரா இத்தாலியில் பயிற்றப்பட்ட இயக்குனர். அவர் கரும்புலி ஒருவரை நேரே சந்தித்து அந்த அனுபவத்தில் கதை படைத்திருக்கிறார் என துசாரவின் (சிறிலங்கா) சண்டே ரைம்ஸ் பேட்டியை தேவ வாக்காக எடுத்து அவரை புகழந்திருக்கிறார். அத்தனை பெரிய கலைஞரை தமிழ் உணர்வாளர்கள் போலி உணர்வால் தாக்கி விட்டார்களாம். இருக்காதா பின்னை ரதனுக்கு கவலை. ஆனால் ஒரு காலத்தில் சிங்கள தொலைக்காட்சி தொடர்களை தயாரித்து வந்த துசாரா மற்றவர்கள் இயக்கிய தொடர்களுக்கு பணம் கொடுத்து இயக்குனராக தனது பெயரை போட்டு இன்பம் கண்டவர். 'பலரது பணத்தை சூறையாடிவிட்டு இத்தாலிக்கு சென்ற இவர் இத்தாலிய மொழியில் பரீட்சயமில்லாமல் என்னத்தை அங்கு படித்துக் கிழித்தார்' என கொழும்பில் உள்ள சில சிங்கள கலைஞர்கள் கேள்வியெழுப்பியதாக இணையதளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

துசாராவின் திரைப்படம் தமிழர்களது போராட்டத்தை கொச்சைப்படுத்துகிறதோ இல்லையோ, அவர் ஒரு படைப்பாளி என்ற வகையில் அவரது கருத்தை தமிழ் மக்கள் மீது வைப்பதற்கு அவருக்கு முழுமையான சுதந்திரம் உண்டு என ரதன் வாதிடுகிறார். அவரது வாதத்தின்படி, குடியேற்ற வாசிகளை அவமதிக்கும் வகையில், நிறவெறியர்களின் கருத்தை முன்னிலைப்படுத்தி, கனேடிய வெள்ளை இனத்தவர் ஒருவர் ஒரு படத்தை எடுத்தால், அப்போதும் ரதன் இப்படித்தான் கருத்து எழுதுவாரோ?

அதுபோல் பிரித்தானியாவில் பீ.என்.பி இப்படி ஒரு படமெடுத்தால் அவர்களின் எலும்பை முறிப்பதற்கு இங்கே ஆங்கிலேயர்களில் மட்டும் கணிசமானளவு ஆட்கள் தயாராக இருக்கிறார்கள். ஆனால் அப்போது பிஎன்பி இயக்குனருக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டிருப்பாரா ஜமுனா ராஜேந்திரன்? அல்லது தாக்குதலில் ஈடுபட்டவர்கள் தமிழ் உணர்வாளர்கள் என்பதால் ஏற்பட்ட சீற்றமா இந்த விமர்சனங்கள்?

சரி நடக்காத விடயங்களை விட்டுவிடுவோம். அண்மையில் வெளிவந்து பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய முகம்மது பற்றிய டென்மார்க் காட்டுன்கள் பற்றி இவர்கள் ஏதும் எழுதினார்களா? ஒருவர் அந்த காட்டுன்களின் அழகையும் மற்றவர் கீறியவரின் கருத்துச்சுதந்திரத்தையும் வியந்து கொண்டிருந்தாரா? இல்லையே?

அப்போ 'பிரபாகரன்' படவிவகாரத்தில் என்ன அதீத அக்கறை? சிங்கள அரசும் அதன் அடிவருடிகளும் தம் கற்பனைக் கதைகளிலும், கனவுகளிலும் தினம் தினம் கொன்றும், காயப்படுத்திக் கொண்டும் இருக்கும் ஒரு தலைவனை அவமதிப்பு செய்வதில் இவர்கள் அகமகிழ்ந்து கொண்டிருக்கலாம். அதுதவிர இவர்கள் இருவரும் கருத்துச் சுதந்திரம் பற்றி எழுதுவதெல்லாம் எனக்கு போலியாகவே தெரிகிறது.

# இல்வாழ்க்கை

ஒருவன் தனது வெளியுலக வாழ்வில் எவ்வளவுதான் வெற்றியுடையவனாக இருப்பினும் அவனுடைய இல்லற வாழ்வில் வெற்றியில்லாதவனாக இருப்பின் அவனை வாழ்வில் வெற்றி பெற்றவன் என்று கூறிவிட முடியாது. எனவே ஒருவன் தனது வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டுமானால் அவனது வெளிவாழ்க்கையுடன் இல்லற வாழ்க்கையிலும் மகிழ்ச்சி உள்ளவனாக, நெறியுடையவனாக வாழ்தல் அவசியம். இது ஒரு வித்தியாசமான கருத்தாகும்.

சங்க இலக்கியங்களெல்லாம் ஒருவன் வாழ்வில் நிம்மதி பெற வேண்டுமாகில், பெருமையடைய வேண்டுமாகில் அவன் இல்லறத்தைத் துறந்து, ஆசைகளைவிட்டு, துறவியாக ஆகிவிட வேண்டும் என்று கூறுகின்றன. இல்லறத்தில் ஈடுபடும் ஒருவனும் அறவாழ்க்கை வாழ்வானேயாகில் அவனும் சிறப்பான பிறவியே என்பதை வலியுறுத்தி இல்லற வாழ்வை மேன்மைப் படுத்தியுள்ள நூல் திருக்குறள் ஆகும்.

இல்வாழ்க்கையெனும் அத்தியாயத்தில் அமைந்துள்ள முதலாவது குறளிற்கு பலர் பலவிதமான பொருளைக் கொடுத்துள்ளார்கள்.

அறவழியில் நின்று இல் வாழ்க்கையில் ஈடுபடுபவர்கள் மற்றைய மூன்று வகையினருக்கும் துணையாக இருத்தல் அவசியம் என்பதே இக்குறளின் சாராரம்சமாகும். ஆனால் இந்த மூன்று வகையினரும் யாவர் என்பதிலேதான் அபிப்பிராய பேதம் உள்ளது. இந்த மூவகையினர், பெற்றோர், வாழ்க்கைத் துணை, மக்கள் என ஒரு சாராரும், மனிதர்களில் மூன்று நிலைகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் பிரமச்சாரியர், வனப்பிரஸ்தர் (குடும்பத்தைப் பிரிந்து வாழ்பவர்), சன்னியாசிகள் என்போரும் உழைப்பவர், விநியோகம் செய்வோர், நாட்டைப் பாதுகாப்போர் ஆகிய மூன்று வகையினர் என்போரும் உளர். (குறள் 41)

இல்லற வாழ்வில் உள்ளவர்களது கடமை யாதெனில் இல்வாழ்வைத் துறந்து சந்நியாசம் பூண்டவர்கள், பசியினால் துன்பப்படுவோர், வயது முதிர்ந்தோர் ஆகியோருக்குத் துணையாக இருத்தலேயாகும். (குறள் 42).

ஒரு சிறந்த இல்லறவாசிக்கு ஐந்து தலையாய

## வள்ளுவர் காட்டும் வழி

எழுதுவது: **இராம. கே. நாதன்**

கடமைகள் உள்ளன. அவை அவனது முன்னோர்களின் பெருமையைக் காத்தல், செயற்கரிய செய்த பெரியோரைப் போற்றுதல், விருந்தாளிகளுக்கு உகந்தவற்றை செய்தல், சுற்றத்தாருக்கு உதவுதல், தனது குடும்பத்தையும் தன்னையும் பாதுகாத்தல் ஆகியவையாகும். (குறள் 43)

பழிக்கு அஞ்சி அறநெறியில் பொருளீட்டி அதனை தகுதியுடையோருக்குப் பகிர்ந்தளித்து அதன் பின்னரே தன்னையும் தன் குடும்பத்தையும் ஊட்டி வளர்ப்பவன் வாழ்வில் அச்சம் என்பது எந்த நாளும் அண்டாது (குறள் 44)

எவனொருவன் தனது மனைவியின் மீதும் குழந்தைகள் மீதும் பாசம் கொண்டு அறநெறியில் தனது வாழ்வை ஓட்டுகின்றானோ அந்த வாழ்க்கையே பண்புள்ளதாகவும் பயனுள்ளதாகவும் அமையும். (குறள் 45)

அறநெறியில் தன் இல்வாழ்வினை ஒருவன் நடத்துவானேயாகில் அவனுக்கு எல்லாவித நலன்களும் கிடைக்கப்பெறும். அதை விடுத்து இல்லறத்தைத் துறந்து துறவறம் கொள்வதால் அவன் அடையப்போகும் பலன் ஒன்றும் இல்லை. (குறள் 46)

எவனொருவன் இல்லற வாழ்வின் அறநெறியைக் கடைப்பிடித்து வாழ்கிறானோ அவனே மற்றைய அறம் சார்ந்த வாழ்க்கையைத் தேடி அலைபவருள்ளே சிறந்தவன் ஆகிறான். (குறள் 47)

எவனொருவன் தன்னைச் சூழ்ந்துள்ளவர்களையும், தன்னையும் அற வழியில் நடாத்திச் செல்கின்றானோ அவனே எல்லாவற்றையும் துறந்து தவநோன்பு புரியும் துறவிகளிலும் பார்க்கச் சிறந்தவனாவான் (குறள் 48).

அறன் வழி நடாத்தும் இல்லறமே மற்றைய எல்லா விதமான வாழ்வு முறைகளிலும் பார்க்கச் சிறந்ததாகும். ஆனால் அந்த அறநெறிவாழ்விலும் பிறர் பழித்துக் கூறும் சந்தர்ப்பங்களைத் தவிர்ப்பானேயானால் அவ்வாழ்வே எல்லாவற்றிலும் மிகச் சிறந்த வாழ்வாகக் கொள்ளப்படும். (குறள் 49)

இவ்வுலகில் ஒரு அறநெறிசார்ந்த இல்லற வாழ்க்கையை எவன் மேற் கொள்ளுகிறானோ அவனை எல்லோரும் போற்றிப் புகழ்வர். புகழ்வது மாத்திரமன்றி அவனைத் தெய்வம் போன்று பிறர் போற்றுவர். இக்குறள் அறநெறிப்படி வாழும் இல்வாழ்க்கையின் பெருமையை எடுத்துக் கூறுகிறது. (குறள் 50)

திருவள்ளுவர் இல்வாழ்வில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர். ஒரு இல்லறவாழ்வு எப்படி இருத்தல் வேண்டும் என்பதற்கு உதாரணமாக வாழ்ந்தவர். அக்காலத்தைய இலக்கியங்கள், சமய நூல்கள் எல்லாம் துறவறத்தைப் போற்றி அதுவே இறைவனை அடைவதற்குச் சிறந்தவழி என்ற கருத்தைக் கூறி நின்ற வேளையில், அறம் சார்ந்த இல்லறவாழ்வே எல்லாவற்றிலும் சிறந்தது என்ற கருத்தை முன் வைத்தவர்.